[1997 ஏப்ரல் 23

627—

தேன்கனிக்கோட்டையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

***4483—திரு. ச. இராஜரெட்டி :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணியை உடனடியாகத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை குடிநீர்த் திட்டம் துரிதப்படுத்தப் பட்ட நகரக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.114 இலட்சம் செலவில் அரசு ஆணை ஒன்று இடப்பட்டிருக்கிறது. அதனுடைய அடிப்படையில் குடிநீர் வழங்கும் துறையால், நாள் 3-11-95-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டும் இருக்கிறது. அதற்குப் பிறகு, தற்போது அந்தத் திட்டத்தை துரிதப்படுத்துவதற்காக ஒரு நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு மீண்டும் 24 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவில் மாருதி கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் மூலம் இந்த ஒப்பந்தம் செய்வதற்கு நம்முடைய மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது.

THIRU S. RAJAREDDY : Hon'ble Speaker Sir, It is true that the allotment of funds have been made for carrying out this work. But the work is progressing very slowly. Though the delivery line work has been completed, the work in supply line is yet to be started. May I know from the Hon'ble Minister, whether he would see that the work is speeded up and completed early ?

மாண்புமிகு திரு. கோ.சி மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எல்லாத் திட்டங்களும் விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்றுதான் போடப்படுகிறது. ஆனால் இடையிலே ஏற்படுகிற சில காலதாமதங்கள் இயற்கையானவையே தவிர, செயற்கையானவை அல்ல. ஆகையினால் மீண்டும் இந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். ஏறத்தாழ 9 பணிகள் இதில் உள்ளடங்கி இருக்கின்றன. அதாவது, நீரேற்றும் குழாய் அமைத்தல், திறந்தவெளிக் கிணறு அமைத்தல், மின் ஏற்றிகள் உருவாக்குதல்,

1997 ஏப்ரல் 23]

கட்டுப்பாட்டு அறை, நீரேற்றும் அறை, இணைப்புக் குழாய் மற்றும் நீரேற்றும் குழாய் பதிக்கும் அறைகள் அமைத்தல் ஆகியவைகளைத் தனித்தனியாகவே அமைக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் அவரவர்களுடைய பணிகளை அவரவர்கள் செய்து உரிய காலத்தில் முடிக்க வேண்டுமென்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் விரைவாக இந்தத் திட்டத்தை நடத்துவதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 628, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

628. —

பாபநாசம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவங்குதல்

***2837—திரு. ந. கருப்பண்ண உடையார் :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 629, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

629—

DENMARK ASSISTANCE FOR WASTE LAND DEVELOPMENT

*** 6240—THIRU B. VENKATASAMY :** Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

a) Is there any proposal to implement Denmark Assistance Scheme in Dharmapuri and Salem Districts to develop the waste and degraded land ; and